**இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு - 2014**

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின்(எஸ்ஈசீ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, ஒதுக்கங்களில் மாற்றங்களின் கூற்று மற்றும் காசுப்பாச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்கள்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 37(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கு இணங்க எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகவுள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின்

மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவரத்தனை ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரச துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள். பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு 2010 செப்தெம்பர் 17 ஆந் திகதிய பொது முயற்சிகள் மீதான குழுவினது கூட்டறிக்கையின் 13 ஆம் பந்தி மற்றும் 2014 நவம்பர் 21 ஆந் திகதிய டீஎம்எஸ்/சீஜஆர்/2014/மிகை ஆம் இலக்க

பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றில் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு முரணாக மீளாய்வாண்டிற்கான ஆண்டு மிகையூதியமாக ரூபா 11,437,446 செலுத்தியிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள் தொழிற்பாட்டுச் செலவுகளிற்கான செஸ் நிதியத்திலிருந்தான மாற்றங்களைக் கணக்கிற்கு எடுக்க முன்னரான தேறிய பற்றாக்குறையானது முன்னைய ஆண்டின் ரூபா 305,703,501 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது ரூபா 348,004,718 ஐக் காட்டியது. ஆண்டிற்கான செஸ் நிதியத்திலிருந்தான மாற்றங்களைக் கணக்கிற்கு எடுத்த பின்னரான தேறிய பற்றாக்குறையானது முன்னைய ஆண்டிற்கான செஸ் நிதியத்திலிருந்தான மாற்றங்களைக் கணக்கிற்கு எடுத்த பின்னரான அந்த ஆண்டிற்கான ரூபா 12,843,540 தேறிய மிகைக்கு எதிராக மீளாய்வாண்டில் ரூபா 14,326,491 ஐக் காட்டியது. ஆகையால் தேறிய மிகையில் ரூபா 27,170,031 ஆன குறைப்பை அது காட்டுகின்றது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

தொழிற்பாட்டு செலவுகளை ஈடுசெய்வதற்கான ரூபா 334 மில்லியன் தொகையான செஸ் நிதியத்திலிருந்தான மாற்றங்கள் உள்ளடங்கலாக மீளாய்வாண்டிற்கான இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் வருமானமானது முன்னைய ஆண்டின் ரூபா 319 மில்லியன் தொகையான செஸ் நிதியத்திலிருந்தான மாற்றங்கள் உட்பட ரூபா 348 மில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 364 மில்லியனை காட்டியது. இது மொத்த வருமானத்தின் 4.6 சதவீத ஒரு அதிகரிப்பை பிரதி நிதித்துவப்படுத்துகின்ற அதே நேரம் மீளாய்வாண்டில் மூலதனச்சந்தை அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமானது முன்னைய ஆண்டிற்கான ரூபா 66 மில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 104 மில்லியனை காட்டியதுடன் அது 58 சதவீத ஒரு அதிகரிப்பைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டிற்கான இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் வருமானம் மற்றும் செலவினத்தின் மாறுதல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2014 | 2013 | மாற்றம் | |
|---|---|---|---|---|
| | ரூபா(மில்) | ரூபா(மில்) | ரூபா(மில்) | % |
| செஸ் நிதியத்திலிருந்து மாற்றம் | 334 | 319 | 15 | 4.7 |
| தரகர் உத்தரவுப் பத்திர கட்டணங்கள், நிருவாக வரி மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | 12 | 14 | (2) | (14.2) |
| நானாவித வருமானம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட உதவிகள் | 18 | 15 | 03 | 20 |
| ஆளுக்குரிய மற்றும் நிருவாகக் கிரயம் | 274 | 269 | 5 | 1.86 |
| மூலதன சந்தை அபிவிருத்தி செலவுகள் | 103 | 66 | 37 | 56.0 |
| ஆண்டிற்கான மிகை/ குறை | (14) | 13 | 27 | 208 |

முன்னைய ஆண்டிற்கான 20 சதவீதத்துடன் ஒப்பிடும் போது மூலதனச் சந்தை அபிவிருத்திக்காக மீளாய்வாண்டில் மொத்த செலவீனத்தில் 27 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 ஆண்டு செயற்பாட்டு திட்டத்திலுள்ள இலக்குகளை அடைதல்

மீளாய்வாண்டின் போது திருத்தப்பட்டிருந்த 2014 – 2016 இற்கான கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயற்பாட்டு திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடைதல் தொடர்பில் கணக்காய்வில் குறிப்பிடத்தக்க தாமதங்கள் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பிரிவு | குறிக்கோள்கள் மற்றும் தந்திரோபாயங்கள் | தொடங்க தீர்மானிக்கப்பட்ட திகதி | பூர்த்தியாக்க தீர்மானிக்கப்பட்ட திகதி | 2014 திசெம்பர் 31ல் உள்ளவாறு தாமதமான மாதங்கள் | திருத்திய பூர்த்தியாக்கல் திகதி |
|---|---|---|---|---|---|
| மூலதனச் சந்தை அபிவிருத்தி மற்றும் ஆராய்சி | விசாலமான சந்தைக்கு புதிய நிதிகள் கவருதல் (வெளிநாடு மற்றும் உள்நாடு)<br>• **பண்டங்கள் மற்றும் சரக்குமுதல் பரிமாற்றங்களின் வசதி ஸ்தாபிப்பு** | | | | |
| | * கொழும்பு பங்கு பரிவர்த்தனை உடன் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கை மூலதனச் சந்தைக்குள் உட்பிரவேசிப்பதற்கான செய்முறையினை ஒழுங்குபடுத்த வசதி செய்தல். | 1Qtr.2014 | 2Qtr.2014 | 6 | 4Qtr.2015 |
| | * கொழும்பு பங்கு பரிவரத்தனை உடன் கணக்கு திறக்கும் நடைமுறைக்காக முன்னுரிமை செயன்முறையை மதிப்பிடல். | 1Qtr.2014 | 2Qtr.2014 | 6 | 4Qtr.2015 |
| | • **விசாலமான சந்தைக்கு புதிய நிதிகளை கவருதல் (வெளிநாடு மற்றும் உள்நாடு)** | | | | |
| | *சொத்து முதலீட்டு நம்பிக்கை பொறுப்பை ஏற்படுத்தல்.(REITs) | 1Qtr.2014 | 4Qtr.2014 | 6 | 2Qtr.2016 |
| | *வியாபார நிதி பரிமாற்றத்தினை ஏற்படுத்தல் (ETFs) | 1Qtr.2014 | 4Qtr.2015 | 0 | 2Qtr.2016 |
| புலனாய்வு | • புலனாய்வு உட்கட்டமைப்பு மற்றும் முறைமைகளின் முன்னேற்றம் | 1Qtr.2009 (CP 2009) | 2Qtr.2011 | 42 | 2Qtr.2015 |
| | • தகவல் தொழில்நுட்ட உள்ளீட்டை பயன்படுத்தி புலனாய்வில் தரவு அடிப்படையை முன்னேற்றம் | 4Qtr.2010(CP 2011) | 2Qtr.2011 | 42 | 3Qtr.2015 |
| மேற்பார்வை | • பங்கு தரகு கம்பனிகள் ஆபத்து அடிப்படையிலான முகாமைத்துவ முறைமை (RMS), விநியோகமும் கொடுப்பனவும் (DvP) மற்றும் மத்திய பங்குபற்றல் தரப்பினர்(CCP) உடன் இணங்குவதற்கு குறைந்தபட்ச தேவைப்பாடுகளை பேணுவதற்கு BBO ஐ அபிவிருத்திசெய்ய | 4Qtr.2012(CP 2013) | 2Qtr.2014 | 6 | 4Qtr.2015 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வசதிசெய்தல். | | | | |
| நிதி மற்றும் நிர்வாகம் | • பொருத்தமான நிரந்தர அலுவலக அமைவிடங்களை அடையாளங்காணல் | 1Qtr.2012 | 3Qtr.2012 | 27 | 4Qtr.2014 |

### 4.1.2 கடும்மேற்பார்வை மற்றும் விசாரணைகள்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் படி, விலை மோசடிகள், உள்ளக / தொடர்புபட்ட தரப்பினர் வியாபாரங்கள், தரகர்களின் ஒழுங்கற்ற நடத்தைகள் என்றவாறான மீறல்களைக் குறைப்பதன் நோக்கில் கண்டுபிடித்த குற்றங்களிற்கெதிராக நேரகாலத்துடன் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். எனினும், மீளாய்வாண்டில் மேற்பார்வை பிரிவு மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனையூடாக இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் இனங்கானப்பட்ட 18 பரிந்துரைகளில் 3 பரிந்துரைகள் மாத்திரம் புலனாய்வுக் குழுவினால் மேலதிக விசாரணைகளிற்காக உத்தரவாதப்படுத்தப்பட்டன.

புலனாய்வுப் பிரிவினால் நடாத்தப்பட்டிருந்த 5 புலனாய்வுகளில், 1 புலனாய்வு பூர்த்தியாக்கப்பட்டதுடன் விடயம் சட்டத்துறை அதிபதிக்கு குறிப்பிடப்பட்டது. புலனாய்வினுடைய 1 அறிக்கை புலனாய்வுக் குழுவுக்கு குறிப்பிடப்பட்டதுடன் அவர்கள் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டவற்றை இன்னும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். மிகுதி 3 புலனாய்வுகள் செயற்பாட்டில் உள்ளன.

### 4.2 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் பொது மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் மீதான ரூபா 53.7 மில்லியன் மொத்தச் செலவில் ரூபா 3 மில்லியன் தெயாட்டகிருல மீதும் ரூபா 2.5 மில்லியன் ஜனாதிபதியின் 9 வது ஆண்டு நிறைவு விழாவின் விளம்பரச் செலவின் மீதும் ஏற்பட்டிருந்தது. மூலதனச் சந்தை செயற்திறனை சுட்டிக்காட்டுவதற்கு மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு பங்குபற்றியிருந்தது என 2015 மே 29 இல் தலைவர் எனக்கு தெரிவித்திருந்தார்.

(ஆ) இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மீளாய்வாண்டில் மூலதன சந்தை அபிவிருத்தி மீது ஏற்படுத்தப்பட்ட செலவினமான ரூபா 36.1 மில்லியன் முன்னைய ஆண்டு நேரொத்த செலவினம் ரூபா 15.9 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 20.1 மில்லியனால் அதிகரித்திருந்தது. மேற்குறிப்பிட்ட ரூபா 36.1 மில்லியனில், ரூபா 24.7 மில்லியன் அல்லது 68 வீதம் ஹொங்

ஹொங், நியூயோர்க் மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் 3 வீதிக்காட்சிகளை நடாத்துவதற்கு செலவிடப்பட்டிருந்தது. இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மூலதனச் சந்தை செயற்திறனை சுட்டிக்காட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட மேற்குறிப்பிட்ட வீதிக்காட்சிகளுக்கான மொத்த செலவில் 50 வீதம் கொழும்பு பங்கு பரிவர்த்தனையால் ஏற்படுத்தப்பட்டது என தலைவர் 2015 மே 29 இல் எனக்கு தெரிவித்திருந்தார்.

(இ) 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு நிதிகளில் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்ட கடன் அட்டை சிட்டைக்காக ரூபா 169,871 ஆன தொகை ஏற்படுத்தப்பட்டிருந்தது. எனினும், தலைவருக்கு ஒரு கடன் அட்டை வழங்குவதற்கு திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 4.3 மனிதவள (ஏச்ஆர்) முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு 2012 இல் அமைச்சின் அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படையில் ஒரு நிறைவேற்று செயலாளரை ஆட்சேர்ப்புச் செய்திருந்தது. இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் அமைச்சின் அங்கீகாரத்தின் படி ஒப்பந்த காலமானது முன்னாள் தலைவருடைய காலப்பகுதி வரைக்கும் மட்டும் இருந்தது. நிறைவேற்றுச் செயலாளர் முன்னாள் தலைவர் விலகிய பின்னர் அமைச்சின் அங்கீகாரம் பெறப்படாமல் 3 மாதங்கள் ஆணைக்குழுவில் வேலைசெய்திருந்ததுடன் மிகைஊதியமாக ரூபா 318,607 இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் செலுத்தப்பட்டிருந்ததும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, ஆணைக்குழுவின் நிர்வாக கைநூலின் ஆட்சேர்ப்பு நடைமுறையை பின்பற்றாமல் ஒரு நிறைவேற்று செயலாளர், ஒரு சாரதி மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் போன்றோரை ஆட்சேர்த்திருந்தது.

(இ) இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 96 ஆக இருந்த பொழுதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரைக்கும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஊழியர்களின் உண்மையான எண்ணிக்கை 8 சேவை தரத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டு 80 ஆக இருந்ததுடன் 2014 ஏப்ரல் இறுதி வரையும் வெற்றிடங்கள் நிரப்பப்படாதிருந்தது.

(ஈ) தாபன விதிக்கோவையின் 2:5:4 ஆம் பந்தியின் பிரகாரம், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு ஒரு நிரந்தர உத்தியோகத்தரை பதில்கடமைக்காக மற்றுமொரு பதவியில் நியமித்திருந்ததுடன் திறைசேரிச் செயலாளர் மற்றும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் என்போரிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டிற்காக ரூபா 450,000 ஆன பதில்கடமை படிகள் செலுத்தப்பட்டிருந்தது. 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய 06/97 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம், பதில் கடமை நியமனங்கள் ஆகக் கூடியது 03 மாதங்கள் இருக்க வேண்டியதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் பதில் கடமை பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

## 5. பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவீனத்திற்கும் உண்மையான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமை, பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) மனிதவள முகாமைத்துவம்
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு